**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.749/2023**
**வழக்கு சாட்சி PW – 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லெட்சுமணப்பெருமாள் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 17th, 2024.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இராவுத்தப்பேரி, இந்திராநகரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 20.09.2022 ம் தேதி, மாலை சுமார் 06.00 மணியளவில் நான் பாப்பாக்குளம் போய்விட்டு, திரும்ப வந்து கொண்டிருந்தேன். கேரளாக்காரர் தோப்பு அருகே வந்துகொண்டிருந்தபோது, சாட்சி பாபு அங்கு நின்றார். நானும், அவரும் அங்கு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆழ்வார்க்குறிச்சி எஸ்.ஐ அங்கு வந்தார். முதல்நாள் நடந்த பிரச்சனை குறித்து பார்வையிட வந்தார்கள். சம்பவயிடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். நாங்கள்

இருவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

கடையம் காவல் ஆய்வாளர் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் முன்னிலையில் கடையம் காவல் ஆய்வாளர் எந்தவித ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான். சிவஞானபுரத்திலிருந்து இராவுத்தர்பேரி செல்லும் ரோடு சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் கேரளாகாரர்களுக்கு பாத்தியப்பட்ட தோப்புகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். கேரளாகாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிறைய தோப்புகள் உள்ள நிலையில் எந்த கேரளாக்காரருக்கு பாத்தியப்பட்ட தோப்பில் வைத்து நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். நாங்கள் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன வழக்கிற்காக நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றும், எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.